**தலைப்பு 122 – சுற்றுலா மற்றும் காணி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 122 – சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 08 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | அவதானிப்புகள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | பெறுமதி ரூபா. | இணங்காமைகள் | | |
| (அ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>(i) நி.பி (1)103 ஆ, ஐ மற்றும் (4)104 | | திருட்டு, மோசடி, விபத்துகள் போன்றவற்றைப் பற்றி காவல்துறைக்கு புகார் அளிக்கப்பட வேண்டும், மேலும் விபத்து குறித்து வங்கி, காப்பீட்டு நிறுவனம், உத்தரவாதம் அளிப்பவர்கள் போன்றவற்றுக்கு உரிய நேரத்தில் தகவல் தெறிவிக்கப்படல் வேண்டியிருப்பினும், 2022 ஏப்ரல் 19 திகதி அன்று வாகண இலக்கம் PD - | PD-2791 காரின் விபத்து தொடர்பான நட்டத்தின் பெறுமதியானது, வாகன விபத்து தொடர்பான இழப்பின் பெறுமதியை இறுதி ஆய்வு அறிக்கையின்படி பிரகாரம் வாகனம் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பெறப்படாத நிலையில் சட்ட நடவடிக்கை | இழப்பை உடனடியாக வசூலிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2791 க்கு ஏற்பட்ட விபத்து தொடர்பாக காவல்துறை மற்றும் சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனத்திற்கு தெரிவிக்கப்படவில்லை.<br><br>நி.பி 101(4) இன் இறுதி ஆய்வு அறிக்கையின்படி, குறித்த நட்டத்தை வாகனம் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து வசூலிக்க பரிந்துரைக்கப்பட்டது, ஆனால் அமைச்சு ரூபா.475,000 செலவழித்து அதை திருத்தம் செய்திருந்த போதிலும் 2024 மார்ச் 31, வரையிலும் இந் நட்டம் ஈடுசெய்யப்படவில்லை. | எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ii) நி.பி 104(4) (i) | (i) | இழப்பு ஏற்பட்ட நாளிலிருந்து 03 மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றாலும், 2024 மார்ச் 31, இன் படி ரூபா.1,323,200 பெறுமதியான 06 வாகன விபத்துக்கள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | வாகன விபத்து ஏற்பட்டால் உடனடியாக செயல்படுவது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் சாரதிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, தற்போதுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். விபத்து நடந்தவுடன் உடனடியாக காவல்துறை மற்றும் காப்பீட்டு நிறுவனம் மற்றும் அமைச்சுக்கு தகவல் தெரிவிக்குமாறு சாரதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அமைச்சுப் பணியாளர்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட வாகனங்களில் ஏற்பட்ட விபத்துக்கள் தொடர்பிலான மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக நி.பி விதிகளின்படி உரிய விசாரணைகளை மேற்கொள்வதில் தடைகள் ஏற்பட்டன. | பரிசோதனை அறிக்கைகளை உடனடியாக பெற வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உரிய விசாரணைகளை மேற்கொள்வதற்காக அதிகாரிகள் நியமிக்கப்படும் போது, அதிகாரிகளுக்கு பணிச்சுமை அதிகமாகவும், குறைந்த அளவிலான அதிகாரிகள் இருப்பதால், ஒன்றுக்கு மேற்பட்ட விசாரணைகளுக்கு ஒரே அதிகாரி நியமிக்கப்படும் சம்பவங்களும் உள்ளன. இறுதி அறிக்கை பெறுவதில் தாமதம் சரியான நடவடிக்கைக்கு இடையூறாக உள்ளது. ஆனால் தற்போதைக்கு அமைச்சுப் பணியாளர்களுக்கு கூடுமானவரை ஒன்றினைக்கப்பட்ட சேவையிலுள்ள சாரதிகளை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், தற்போதுள்ள குறைபாடுகள் சரி செய்யப்பட்டு வருகின்றன. | |
| (ii) 2022 மே 09, அன்று அமைச்சர் அலுவலகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ரூபா.395,500 மதிப்பிலான சரக்கு பொருட்கள் எரிந்து நாசமானது தொடர்பாக நி.பி.104(4) இன் இறுதி விசாரணை அறிக்கையின்படி, 2023 செப்டம்பர் இல் இவ் இழப்பீட்டை அமைச்சரிடமிருந்து வசூலிக்க பரிந்துரைக்கப்பட்டது ஆனால் காணி அமைச்சரிடமிருந்து, இழப்பு மீட்கப்படவில்லை. | அமைச்சரின் அலுவலக சரக்குகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் பெறுமதியை பெற்றுத்தருமாறு முன்னாள் காணி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் எவ்வித பதிலும் கிடைக்காத நிலையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | இழப்பை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii)நி.பி.(1)109 | மிகைக் கட்டணம், காப்பீடு, உத்தரவாதம் போன்ற அனைத்து வழிகளிலிருந்தும் மீட்டெடுக்க வேண்டிய பணத்தை தீர்மானித்தல் உட்பட அனைத்து பூர்வாங்க பணிகளும் முடிந்த பிறகு. சேதத்திலிருந்து மீளப்பெறப்பட வேண்டிய ஆகக்கூடிய பெறுமதிக்கும் மீளப்பெறப்பட தீர்மாணிக்கப்பட்ட தொகைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுமாயின், பதிவேடுகளிலிருந்து இவ் வேறுபாட்டை நீக்குவதற்கு அமைச்சுக்கு அதிகாரம் இருந்த போதிலும், அத்தகைய 11 சந்தர்பங்கள் தொடர்பாக ரூபா 2,724,100 மீதி இருப்பது அவதானிக்கப்பட்டது. | KI-1527 மற்றும் PD-2791 ஆகிய வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்பின் மதிப்பை நி.பி. இன் இறுதி விசாரணை அறிக்கையின்படி வாகனம் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியிடமிருந்து வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பொறுப்பான அதிகாரி பணம் செலுத்தாத காரணத்தால் சட்டமா அதிபருக்கு சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பியுள்ளோம்.<br><br>HQ – 7194 மற்றும் PF –0628. வாகனங்களுக்கான நி.பி.104(3) பூர்வாங்க ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டன. அதன்படி, மேலும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.<br><br>PE - 0628 - இந்த வாகனம் முன்னாள் காணி அமைச்சருக்கு குறித்தொதுக்கப்பட்டதற்கமைய நி.பி.104 (4) இன் இறுதி பரிசோதனையின் பரிந்துரைகளுக்கு அமைய, வாகனம் குறித்தொதுக்கப்பட்ட முன்னாள் காணி அமைச்சரிடமிருந்து இழப்பு தொடர்பான பழுதுபார்ப்பு தொகையில் 50 சதவீதம் அறவிடப்படும்.<br><br>PC - 2294, HQ - 7232, PF - 6071, KV -0433 மற்றும் CAK - 4226 வாகனங்கள் சார்பில் நி.பி 104(4) அடிப்படையில் இறுதித் பரிசோதனைக்கு அதிகாரிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | இழப்பை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2008 பெப்ரவரி 06 ஆம் திகதி 05/2008 சுற்றறிக்கையானது 2018 ஜனவரி 24 ஆம் திகதி 05/2018 (1) சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறான அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | அமைச்சினால் பிரஜைகள்/சேவை நலனாளி விஞ்ஞாபனமொன்று தயாரித்து அது பொதுமக்களுக்கு தெரியும் வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. . | பிரஜைகள்/சேவை நலனாளி விஞ்ஞாபனத்தை காட்சிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, இதனால் அது பொதுமக்களுக்கு திறந்திருக்கும். | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 வைப்புகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் பணியாட்டொகுதியினரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 873,081 ஆனது பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. | தரவுத்தளத்தில் பதிவு செய்துள்ள உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்புகள் மாதாந்தம் முறையாக அனுப்பப்படுவதுடன், பொது வைப்புக் கணக்கில் எஞ்சியவை இதுவரை தகவல் இன்மையின் காரணமாக பதிவு செய்ய முடியாத உத்தியோகத்தர்களின் பங்களிப்புகளாகும். அவர்களுக்கு தகவல் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உடனடியாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயல்திறன்

### 3.1.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சகம் சட்டங்களைத் திருத்த விரும்பினாலும், சட்டங்களைத் திருத்தும் செயல்முறை 2023 ஆம் ஆண்டில் முடிக்கப்படவில்லை. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. | | |
| | (i) 1931ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க காணி நிருணயக் கட்டளைச் சட்டத்துடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளைத் திருத்துதல் | இச்சட்டம் தொடர்பான ஒழுங்குமுறைகளில் திருத்தங்கள் 12.12.2023 அன்று தொடங்கப்பட்டன. இதற்கமைய, 1931 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க காணி நிருணயக் கட்டளைச் சட்டம் மற்றும் அதன் கட்டளைகள் / ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை 2023.12.12 ஆம் திகதிய | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கடித இலக்கம் 03/01/01 மூலம் திருத்துவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் முதலாவது கூட்டம் 2023.12.19 ஆம் திகதி நடைபெற்றதாக காணி உரிமைகள் தீர்ப்புனவுத் திணைக்களம் அறிவித்துள்ளது. | |
| (ii) | 1935 இன் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துதல் | 1935 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்திற்கான திருத்தமானது, 2022.03.25 ஆம் திகதிய வர்த்தமானியின் பகுதி II க்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க காணி அபிவிருத்தி (திருத்த) சட்டம் என வெளியிடப்பட்டுள்ளது. மீள் வதிவிட நடவடிக்கைகளுக்காக எதிர்காலத்தில் வழங்கப்படுகின்ற அனைத்து அனுமதிப்பத்திரங்களுக்கும் நிபந்தனையற்ற முழுமையான உரித்துடைய சலுகைத்தாள் வழங்குவது தொடர்பில் இந்த அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கான அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வரைவுத் திணைக்களத்துடன் குறித்த பணிகள் இடம்பெற்று வருகின்ற அதேவேளை, ‘‘உரிமை நிகழ்ச்சித்திட்டத்தின்’’ கீழ் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு வழங்கப்பட்ட அனுமதியின் பிரகாரம் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் சலுகைத்தாள், அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு சுதந்திர உறுதிகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தைத் திருத்தியதன் மூலம் உரிமை நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்த்த அதே நோக்கத்தை ஏற்கனவே அடைந்துள்ளதால், இது தொடர்பில் சட்டத்தை எவ்வாறு திருத்துவது என்பது குறித்து வரைவு சட்டங்கள் மூலம் இதுவரை எமக்கு அறிவிக்கப்படவில்லை. | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தைத் திருத்துதல் | இறுதி வரைவு தயாரிப்பாளருடன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்டு வருகின்றது, மேலும் சட்டத்தைத் திருத்துவது மிகவும் சிக்கலான செயல்முறையாக இருப்பதால் சட்டத்தின் திருத்தத்தை முடிக்க எடுக்கும் நேரத்தை குறிப்பிட முடியாது. | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iv) 1969 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க நில அளவை மற்றும் வரைபடம் தயாரித்தல் நிறுவகச் சட்டத்தைத் தாபிப்பதற்கான திருத்தம் | 1969ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க நில அளவை மற்றும் வரைபடமாக்கல் நிறுவக சட்டத்தை நிறுவுவதற்கான திருத்தம் 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எவ்வாறாயினும் தேவையின் அடிப்படையில் இச்சட்டத்தினை திருத்தம் செய்வதற்கான ஆரம்ப நடவடிக்கையாக இந்த அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட 1969ம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தை திருத்தம் செய்வதற்கான இலக்க /1/1/6/5CM/21/VII-I அமைச்சரவை பத்திரம் 2023.11.16 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2023.12.06 ஆம் திகதி அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/23/2215/615/063 மூலம் இவ் அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், திருத்தப்பட்ட சட்டமூலமானது சட்ட வரைஞரினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (v) 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க அரசாங்க காணி வழங்கல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் திருத்தம் | 1979 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க அரசாங்க நில மானியங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கான திருத்தம் 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், தேவையின் அடிப்படையில், சட்டத்தைத் திருத்துவதற்காக காணி ஆணையாளர் நாயகத்தினால் 2023.12.12 ஆம் திகதி குழுவொன்றை நியமித்ததுடன், நில மானியங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் திருத்தப்பட வேண்டிய பிரிவுகளை அடையாளம் கண்டு சட்டத் திருத்தம் தொடர்பான அமைச்சரவை வரைவு குறிப்பாணையைத் தயாரிக்கும் பணியில் இக்குழு ஈடுபட்டுள்ளது. | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (vi) 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துகளைப் பதிவு செய்தல் சட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளைத் திருத்துதல் | 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துகளைப் பதிவு செய்தல் சட்டம் தொடர்பான ஒழுங்குவிதிகளின் திருத்தம் 2023 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உரித்துகளைப் பதிவு செய்யும் சட்டத்தின் ஒழுங்குவிதிகளில் திருத்தம் செய்வது தொடர்பில் 2022.12.01 ஆம் திகதி 2308/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்குமாறு 2023.12.05 ஆம் திகதி கருத்திட்டப் பிரிவு கோரிக்கை விடுத்தது. அதற்கமைய | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக 2024.03.05 ஆம் திகதி வர்த்தமானி பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட ஒழுங்குவிதிகள் அடங்கிய வர்த்தமானியை பரிசீலிப்பதற்கான ஆலோசனைக் குழுக் கூட்டம் 2024.04.26 அன்று பாராளுமன்றத்தில் நடைபெற்றது. | |
| (vii) தேசிய காணி ஆணைக்குழுச் சட்டத்தை உருவாக்குதல் | 2023.06.21 ஆம் திகதி தேசிய காணி ஆணைக்குழு சட்டத்தை தயாரித்தல் என்ற அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்து தேசிய காணி ஆணைக்குழு சட்டத்திற்கான தயாரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. அரச காணிகளை கையகப்படுத்துவது தொடர்பில் அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவுக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.<br>”தேசிய காணி ஆணைக்குழு சட்டத்தை தயாரித்தல்” என்ற தலைப்பில் 2023.10.02 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்திற்கான அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, தேசிய காணி ஆணைக்குழு சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, சட்ட வரைவுத் திணைக்களத்தினால் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டு வருகிறது.<br>இறுதி வரைவு 17.04.2024 அன்று சட்ட வரைவுத் துறையால் ஒப்புதலுக்காக அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (viii) உத்தேச புதிய காணிச் சட்டத்தை உருவாக்குதல் | உத்தேச புதிய காணிச் சட்டத்தின் வரைவு 2023 ஆம் ஆண்டுக்கான அமுலாக்கல் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. எவ்வாறாயினும், உத்தேச புதிய காணி சட்டத்தை வரைவது தொடர்பான குழுவின் முதலாவது கூட்டம் 2023.07.20 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றதுடன், அதன் பின்னர் குழுவின் 05 கூட்டங்கள் நடைபெற்றன.<br>”உத்தேச புதிய காணி சட்டத்தை வரைவதற்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவுக்கு பணிகளை ஒப்படைத்தல் மற்றும் குழுவின் அதிகாரிகளுக்கு கொடுப்பனவு வழங்குதல்” என்ற தலைப்பில் 2023.08.04 ஆம் திகதி அமைச்சரவைக் குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டதுடன், உத்தேச புதிய காணி சட்டத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கான அனுமதி கிடைக்காததால், குழுவின் கூட்டத்தில் | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடைமுறை சிக்கல்கள் எழுந்துள்ளதால் குழு கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | |
| | (ix) காணி நிர்வாகம் தொடர்பான உலக வங்கித் திட்டம் | காணி நிர்வாகம் தொடர்பான உலக வங்கியின் நிகழ்ச்சித்திட்டம் 2023 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. உலக வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வேலைத்திட்டம் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் 2023.07.17 ஆம் திகதி இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து, 2023.11.08 அன்று காணிக் கொள்கை மற்றும் நிர்வாகம் குறித்த அறிவார்ந்த செயலமர்வு நடைபெற்றது. | குறித்த திருத்தங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில், கரையோர சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, புந்தல தேசிய பூங்காவில் பார்வையாளர்களின் வசதிகளை மேம்படுத்த வனவிலங்கு பாதுகாப்புத் துறையினால் ரூபா.9.9 மில்லியன் செலவிடப்பட்டிருந்தாலும், 2023 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி 60 சதவீத முன்னேற்றம் மட்டுமே அடையப்பட்டுள்ளது. | .புந்தல தேசிய பூங்காவில் உள்ள சுற்றுலா வசதி மையத்தை புனரமைப்பதற்காக 2023.06.15 ஆம் திகதி இந்த அமைச்சினால் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ரூபா 9.89 மில்லியன் விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2023.10.13 ஆம் திகதிக்குள் கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தங்களின் பிரகாரம் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு 2024 மே 14 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், சீரமைப்பு பணிகள் தொடங்கிய பிறகு, முதல் தவணைப்பணமாக சம்பந்தப்பட்ட கட்டுமான நிறுவனத்திற்கு 30.12.2023 அன்று ரூபா.1,395,912 செலுத்தப்பட்டது. | செலவழித்த தொகையிலிருந்து அதிகபட்ச செயல்திறனை அடைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.1.2 நிதி விடுவிக்கப்பட்ட பிறகும் எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் சுற்றுலா அமைச்சகத்தால் செயல்படுத்த முன்மொழியப்பட்ட நானுஓயா ரயில் நிலைய மேம்பாட்டு திட்டத்திற்கான மொத்த செலவு மதிப்பீடு ரூபா.74,630,925 ஆகும். நவீனமயமாக்கல் முத்தரப்பு ஒப்பந்தத்தின் கீழ், சுற்றுலா அமைச்சின் அனுசரணையில் ரயில்வே துறையின் மேற்பார்வையின் கீழ் பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனை | | |

| | | |
|---|---|---|
| பணியகத்தினால் (CECB), 2021 ஆம் ஆண்டு தொடங்கி 9 மாத காலத்திற்குள் முடிக்க திட்டமிடப்பட்டது, ஆனால் அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற 5 மாதங்களுக்கும் மேலாக காலதாமதம் ஏற்பட்டதனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை மீதமானது. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மொத்த மதிப்பிடப்பட்ட தொகையில் 16 சதவீதத்தையும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் 84 சதவீதத்தையும் ஏற்க ஒப்புக் கொண்டு 2023 இல் பணிகளைத் தொடங்கியது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) 2023 மே 03 ஆம் திகதியிடப்பட்ட மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்தின் திட்ட முகாமையாளரின் கடிதத்தில் நானுஓயா புகையிரத நிலைய மேம்பாட்டு திட்டத்தின் எஞ்சிய பணிகளுக்காக ரூபா 106,438,331 திருத்தப்பட்ட செலவு மதிப்பீடு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த பெறுமதி ஆரம்ப பெறுமதியை விட 72 வீத அதிகரிப்பாகும் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. | மன்னார் கோட்டையின் உள்ளக கட்டிடங்களை புனரமைத்தல் மற்றும் நானு ஓயா புகையிரத நிலையத்தை நவீனமயப்படுத்தல் ஆகியவற்றின் தற்போதைய நிலைமை குறித்து அறிவிக்கும் அமைச்சரவை குறிப்பு இல. MT/2023/05 மற்றும் 2023.02.28 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டத்தை நிறைவு செய்வதற்கு, புதிய விலையில் ரூபா.120 மில்லியன் ஒதுக்கீடுகள் தேவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2024.04.18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் அமப/23/053/615/021 இன் மூலம் மேற்படி அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தின் மேலதிக பணிகளை ஆரம்பிக்கும் போது உரிய விலைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படும் என்பதை நான் உங்களுக்கு அறியத்தர விரும்புகின்றேன். | மேலதிக செலவை அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானங்களை எடுக்க வேண்டும். |
| (ii) கட்டுமான ஒப்பந்த நிறுவனத்தின் பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனை பணியகம் சமர்ப்பித்த ரூபா.10,248.187 செலுத்த வேண்டிய பில் தொகை இன்னும் செலுத்தப்படவில்லை. | இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் 26.03.2024 அன்று நிதி வழங்கியது. ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் இந்த திட்டம் மீண்டும் தொடங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | பில்களை தாமதமின்றி செலுத்த வேண்டும். |
| (iii) தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாகாண சபையின் தொழில்நுட்ப | இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், இதுவரை அரைகுறையாக பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து பணிகளையும் | ரயில் நிலையத்தை பொதுமக்கள் விரும்பும் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரி ஆகியோருடன் 2024 மார்ச் 11 ஆம் திகதி நானு ஓயா புகையிரத நிலையத்தில் நடத்தப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது, கருத்திட்ட பணிகள் முடிக்கப்படவில்லை மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட பகுதிகள் சரியாக பராமரிக்கப்படவில்லை அதாவது பழுதுபார்ப்புக்காக இடிக்கப்பட்ட படிக்கட்டுகள், கழிப்பறைகள் அழுக்காக மற்றும் அசிங்கமாக இருந்தன, உட்கார இருக்கைகள் போதுமானதாக இல்லை மற்றும் துருப்பிடித்து பாழடைந்த நிலையில் இருந்தது கவனிக்கப்பட்டது. இவ்வாறு, பல ஆண்டுகளாக முடிக்கப்படாத பணிகள் காரணமாக, ரயில் நிலையம் சுற்றுலா தலங்களுக்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்படவில்லை. | நிறைவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகிறேன். | வகையில் பராமரிக்க வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் சுற்றுலாப் பிரிவின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில், கரையோர சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான (Promotion of Marine Tourism) 08 கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா14.69 மில்லியன் ஆகும். அடையாளம் காணப்பட்ட திட்டங்களில் ஒன்றான புறாதீவில் மலசலகூடம் அமைப்பை நிர்மாணிப்பதற்கான திட்டம் கரையோர பாதுகாப்பு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானதால் கைவிடப்பட்டதுடன் ரூபா 4.69 மில்லியன் செலவில் இரண்டு படகுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | நிதி அமைச்சகம் மற்றும் போக்குவரத்து அமைச்சகத்திடமிருந்து ஒதுக்கீடுகள் கோரப்பட்டன. அவ் ஒதுக்கீடு கிடைக்காதவிடத்து, நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் ஆகியவற்றிடமிருந்து தேவையான ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டது.<br>அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் இணக்கம் தெரிவிக்கப்பட்ட நிதியில் 16 வீதமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய 84 சதவீத ஒதுக்கீட்டை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தினால் 2024.03.26 ஆம் திகதி வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதால், இத்திட்டத்தின் அடுத்த பணிகளை விரைவில் தொடங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒப்புக்கொண்டபடி 02.05.2024 முதல் திட்டத்தை மீண்டும் தொடங்க முடிவு செய்யப்பட்டது. | திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள் பயனுள்ள மற்றும் அர்த்தமுள்ள முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.2 கொள்முதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சின் முன்னாள் பிரதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட வாகனம் 2016ஆம் ஆண்டு 02 லேண்ட் ரோவன் டிஸ்கவரி ரக வாகனங்கள் தனியார் நிறுவனமொன்றிலிருந்து அரசாங்க கடமைச் சலுகையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டன. இது தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரின் அவதானிப்புகளை உள்ளடக்கிய 2023 மே 29 ஆம் திகதியிடப்பட்ட MOF/DG/LAD/CO/53/2023 கடிதத்தின் 01 ஆம் இலக்க பந்திக்கு இணங்க அரச நிறுவனங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் மற்றும் 02 ஆம் பந்தியின் ஊடாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களை அரசாங்கத்திற்கு கொள்வனவு செய்தல் தொடர்பான பொதுக் கொள்கையை மீறும் வகையில் இந்த கொள்வனவு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொள்வனவு செயற்பாட்டை மீறியமை தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. ஏறக்குறைய ஓராண்டு ஆகியும் அந்த அறிவுறுத்தல்கள் செயல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. | இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவும் இரண்டு வாகனங்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் கணக்காய்வு அத்தியட்சகரினால் கூறப்பட்ட பிரச்சினை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது, அது இதுவரை தீர்க்கப்படவில்லை. அத்துடன், இந்த அமைச்சின் (காணிப் பிரிவு) மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் திணைக்கள ரீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தயவுடன் தெரிவிக்கப்படுகிறது. | அனைத்து கொள்முதல்களும் கொள்முதல் வழிகாட்டுதல் விதிக்கோவையின் அறிவுறுத்தல்களின்படி செய்யப்பட வேண்டும். |

### 3.3 முகாமையின் பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் சேதனப் பசளை செயற்திட்டத்தை நிறைவு செய்வதன் மூலம் வளங்களை அகற்றுவது தொடர்பாக 2023 மார்ச் 28 ஆம் திகதி அமப/23/383/615/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானமானத்தின் மூலமாக திட்டத்தின் தோல்விக்கான காரணங்கள், | 2023.03.28 ஆம் திகதிய அமப/23/0383/615/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க, குறித்த செயற்திட்டத்தின் நிறைவின் ஹபின்னர் வளங்களை அகற்றுவது தொடர்பில், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் ஒரு விசேட விசாரணைக் குழு | சேதனப் பசளை செயற்திட்ட அறிக்கையைத் தாமதமின்றி பெற்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

அதன் நிதி எவ்வாறு பயன்படுத்தப்பட்டது மற்றும் அதற்கு பங்களிப்பு செய்த தரப்பினர் குறித்து சுயாதீனமான முழுமையான விசாரணையை நடத்துதல். திட்டம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து பொருத்தமான பரிந்துரைகளுடன் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க ஒரு குழு அமைக்கப்பட்டது, ஆனால் தொடர்புடைய அறிக்கைகள் ஏப்ரல் 2024 வரையான கணக்காய்வு திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை.

அமைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான அனைத்து தகவல்களும் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளன.
இருப்பினும், குழுவின் அறிக்கை 20 நொவெம்பர் 2023 அன்று இன்னும் கிடைக்கவில்லை, எனவே முதல் நினைவூட்டல் கடிதம் 20.11.2023 அன்று குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. அந்த அறிக்கை இன்னும் அமைச்சகத்திற்கு கிடைக்கவில்லை.

(ஆ) அமைச்சகத்தின் காணி கையகப்படுத்தும் நடவடிக்கையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக செலவிடப்பட்டதால், காணி கையகப்படுத்துவதற்கான இழப்பீட்டுத் தொகையை மட்டும் வழங்குவதற்குப் பதிலாக, இப்பணியின் தாமதத்தின் காரணமாக இழப்பீடு பெறுபவர்களுக்கு கூடுதல் வட்டியாக பெரும் செலவு செலுத்தப்படுவது கண்டறியப்பட்டது. அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(i) மாத்தறை மாவட்டம் தெவிநுவர பிரதேச செயலகப் பிரிவு பத்தேகம்மெத்த கிராம உத்தியோகத்தர் வசமே மார /2794 அடிப்படை காணித்துண்டு இல. 01 முதல் 35 வரை (காணித்துண்டு இல 20 மற்றும் 23 தவிர) பிம்புரே 0.305 ஹெக்டேயர் பெரிய காணித் தொடர்பாக சட்டத்தின் பிரிவு 7 இன் படி, 2020.03.06 திகதியிட்ட 2165/69 வர்த்தமானிக்கமைய 23.07.2020 திகதி முதல் காட்சிப்படுத்தப்பட்டு, நிலத்தின் உரிமையாளருக்குக் இடைக்கால ஆணை 38 (அ) வின்படி 08.01.2018 அன்று 33 ஆம் இலக்க காணித்துண்டை கையகப்படுத்துவதற்கான நிறைவேற்றப்பட்டது. அதன் உரிமையாளருக்கு 2022 பெப்ரவரி 23 இல் ரூபா 43,700,100 இழப்பீடாக வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக் கையகப்படுத்தல் 08.01.2018 ஆந் திகதிய 2053/5 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. 2018.04.06 ஆம் திகதி கூற்று 5 மற்றும் 2020.03.06 ஆம் திகதி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 7 இன் கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதுடன், உரித்து சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. உரிமையை முடிவு செய்த பிறகு, 10 (1) ஏ இன் முடிவும் 07.11.2020 அன்று வெளியிடப்பட்டுள்ளது.
05.04.2021 அன்று மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்ற பிறகு 28.04.2021 அன்று 17 முடிவு வெளியிடப்பட்டது.
13.12.2021 அன்று இழப்பீடு வழங்கல் மற்றும் 19.11.2022 அன்று வட்டி ஒதுக்கீடு வெளியிடப்பட்டது. அதன்படி, கையகப்படுத்தல் சட்டத்தின்படி, சாதாரனமான கையகப்படுத்தல்

நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை திறமையாக்கவும், கூடுதல் வட்டி செலவைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| கையகப்படுத்தல் செயல்முறைக்கு 4 ஆண்டுகளும் 1 மாதமும் 15 நாட்களும் கழிந்ததால் கூடுதல் வட்டியாக ரூபா.12,616,658 செலுத்தப்பட்டுள்ளது அவதானிக்கப்பட்டது. | செயல்முறை 149 - 173 வாரங்கள் வரை ஆகும் மற்றும் கையகப்படுத்துதலை செயல்படுத்துவதில் பல நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. எடுக்கப்பட்ட நேரம் காரணமாக, சட்டத்தின் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தை விட அதிக நேரம் எடுத்துக்கொண்டதை நான் காண்கிறேன். | |
| (ii) 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரிப்பு (திருத்த) சட்டத்தின் 460 ஆம் அத்தியாயத்தின் 17 ஆம் பிரிவின் பிரகாரம் லக்கல பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள நக்கிள்ஸ் பாதுகாப்பு வலயத்திற்காக காணியை சுவீகரிப்பதற்காக இலுக்கும்புர கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் 2010 மார்ச் 17 ஆம் திகதி அறிவித்தல் வெளியிடப்பட்டது.<br>இந்த நிலத்தின் உரிமையாளருக்கு அதன் உரிமையை மு.வி.மா. 1659 ஆம் காணித்துண்டு இலக்கம் 01 இன் 123.33 பேர்ச்சசான 89 பேர்ச்சஸ், 17.165 பேர்ச்சஸ் மற்றும் 17.165 பேர்ச்சஸ் என சுவீகரிப்பது தொடர்பில் பிரிவு 38 (அ) இன் படி 21.11.2013 அன்று இடைக்கால உத்தரவு வெளியிடப்பட்ட பின்னர் 7 ஆண்டுகள் மற்றும் 1 மாதங்களும் 22 நாட்களுக்குப் பிறகு பிரிவு 17 இன் கீழ் காணியின் உரிமையாளருக்கு இழப்பீட்டு பணமாக ரூபா.31,770,300 உம் கூடுதல் வட்டியாக 2022 ஜுலையில் ரூபா.14,955,327 உம் செலுத்தப்பட்டது. | இந்த கையகப்படுத்தல் 2000 ஆம் ஆண்டில் நக்கிள்ஸ் பாதுகாப்பு வலயத்திற்காக தொடங்கப்பட்டது. காணி சுவீகரிப்பு சட்டம் தொடர்பாக பிரிவு 4, 38(அ) இடைக்கால ஆணை மற்றும் பிரகடனம் எண். 5 ஆகியவையும் 1837/37 இலக்க மற்றும் 13.06.2013 திகதி வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் காணித்துண்டு இலக்கம் மா 1659 ஆம் இலக்க அமைப்புத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பிரிவு 7 05.10.2016 அன்று வெளியிடப்பட்டது மற்றும் தலைப்பு சரிபார்ப்பை நடத்துவதன் மூலம் தலைப்பை சரிபார்த்த பின்னர், 30.08.2018 திகதியிட்ட 10 (1) A இன் முடிவு மற்றும் 13.05.2020 அன்று 17 தீர்மானங்களின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. 24.10.2020 அன்று இழப்பீடு வழங்கப்பட்டது. அதன்படி, பிரிவு 9 இன் கீழ் உரிமைகோரல் விசாரணையின் போது எழும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக, அதாவது உரிமைகோரலுக்காக வருகைதந்த நபர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் தெளிவின்மை, சர்ச்சைகள் போன்றவை, உரிமைகோரலின் விசாரணைக்கு எடுக்கும் நேரத்தை நீட்டிக்க முடியும். அதைக் கட்டுப்படுத்தும் திறன் அமைச்சரவைக்கு இல்லை. | நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை திறமையாக்கவும், கூடுதல் வட்டி செலவைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில் 870 - கோணவ கிராம உத்தியோகத்தர் பிரதேசத்தில் அமைந்துள்ள வீரம்புகெதர பொலிஸ் நிலையத்தை ஸ்தாபித்தல் தொடர்பாக 01 ஏக்கர், 03 ரூட் மற்றும் 37.01 | இந்த கையகப்படுத்தல் தொடர்பாக, 24.06.2016 திகதியிட்ட சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் அறிவிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தும் செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 4 மற்றும் 5 வது அறிக்கையும் வெளியிடப்பட்டு, பிரிவு 7ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, உரித்துப் பரீட்சை நடத்தி | -மேலுள்ளவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | பேர்ச்சஸ் காணியை 2016.06.24 ஆம் திகதி சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் 2019.01.11 ஆம் திகதி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு 0.7944 ஹெக்டேர் ஆகும். இது நில சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமானது மற்றும் இதன் மதிப்பு ரூபா.12,564,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. 31.04.2022 திகதியிட்ட நிலம் கையகப்படுத்தல் இயக்குநரின் தலைமை நிதி அதிகாரிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்படி, இழப்பீடு வழங்குவதற்கான ஒதுக்கீட்டில் ரூபா.12,564,000 க்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 2023 டிசம்பர் கணக்காய்வு திகதிவரை, இந்த செயல்முறையில் சுமார் 6 1/2 ஆண்டுகள் தாமதம் ஏற்பட்டது, இது தவிர, மேலதிக வட்டி செலுத்த வேண்டியிருந்தது. | உரிமையைத் தீர்மானித்த பின்னர், 2022.04.02 ஆம் திகதி பிரதேச செயலாளருக்கு ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளோம். இந்த கையகப்படுத்துதல் சட்டத்தின் பொதுவான நடைமுறையின் கீழ் செய்யப்பட்டுள்ளதால், இதற்கு வட்டி செலுத்த வேண்டிய அவசியமில்லை. | |
| (iv) | கொழும்பு மாவட்டம் கடுவெல பிரதேச செயலாளருக்கு சொந்தமான மாலபேயில் அமைந்துள்ள பெண்கள் கல்லூரிக்கான காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38 (அ) பிரிவின் கீழ், மாலபே ஹிக்காவத்தை காணியின் மு.பி.கொ 9134 இன் 01 மற்றும் 02 ஆம் இலக்க காணிதுண்டுகள் 0.23522 ஹெகடேயர் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன், 38 (அ) இன் இடைக்கால உத்தரவு 2010.02.15 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இக்காணியை கையகப்படுத்துவதற்கான வழங்கப்பட்ட திகதி 23.06.2020 என்பதுடன், சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் காணியின் உரிமையாளரான ஒரு நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட நட்டஈட்டின் பெறுமதி ரூபா.40,140,000 வாகும். எவ்வாறாயினும், இடைக்கால | ராகுல பெண்கள் கல்லூரிக்கு நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக, 31.07.2008 அன்று 0.2362 ஹெக்டேயர் நிலம் கையகப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டு, 01.04.2009 அன்று, பிரிவு 4 இன் கீழ் உத்தரவு மற்றும் 38(அ) இடைக்கால உத்தரவு இல 1641/4 வர்த்தமானி மூலம் 15.02.2010 ஆம் திகதி வெளியிடப்பட்டது. 26.06.2014 அன்று உரிமைகோரல் விசாரணையை நடத்தி, பிரிவு 9ன் கீழ் உரிமைகோரலை உறுதிசெய்து 10(1) அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. காணி உரிமைகோருபவர்களுக்கான நட்டஈட்டுத் தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தீர்மானிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், மதிப்பீட்டு அறிக்கை 2020.06.08 ஆம் திகதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 2020.06.23 ஆம் திகதியும் 17 தீர்மானங்களும் வெளியிடப்பட்டுள்ளது. மதிப்பீட்டைப் பெறுவதற்கு சுமார் 5 ஆண்டுகள் ஆனதால் 17 முடிவை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை திறமையாக்குவதுடன், வட்டி செலவையும் குறைக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவு 38 (அ) வழங்கப்பட்டு 10 ஆண்டுகள் மற்றும் 9 மாதங்கள் மற்றும் 15 நாட்களுக்குப் பிறகு கையகப்படுத்தல் செயல்முறை நடந்ததால் ரூபா.30,320,821 மேலதிக வட்டி செலுத்த வேண்டியிருந்தது. | | |
| (v) | அம்பாறை மாவட்டத்தின் பதியத்தலாவை பொலிஸ் நிலையத்திற்கான காணி சுவீகரிப்பின் கீழ், காணி உரிமையாளரான சர்வோதய சிறமதான சங்கத்திற்கு சொந்தமான மொரட்டுவை, ராவத்தவத்தை வீதியில் இலக்கம் 98, இல் அமைந்துள்ள தம்சக் மந்திரா நிறுவனத்தின் 1.0120 ஹெக்டேயர் காணி கையகப்படுத்தலுக்காக அரசாங்கத்தால் இதற்காக 15.12.2015 அன்று 38 (அ) இடைக்கால ஆணை வெளியிடப்பட்டு ரூபா.18,484,750 இழப்பீடாகவும், 6 ஆண்டுகள், 10 மாதங்கள் 12 நாட்கள் தாமதத்திற்கு வட்டியாக ரூபா.8,884,412 மற்றும் ரூபா.10,263,954 வழங்கப்பட்டுள்ளது. | இந்த கையகப்படுத்தல் 2014 ஆம் ஆண்டில் படியாட்லாவ காவல் நிலைய கட்டுமானத்திற்காக தொடங்கப்பட்டது மற்றும் பிரிவு 2 இன் கீழ் அறிவிப்புகள் 14.10.2015 அன்று காட்சிப்படுத்தப்பட்டன. 1945/11 ஆம் இலக்க 38(அ) ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் 2015.12.15 ஆம் திகதி அரசாங்கத்தால் பெறப்பட்டது. கூற்று 5 2017.07.05 ஆம் திகதியும் 7 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவித்தலும் 2019.05.21 ஆம் திகதியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பிரிவு 9 இன் கீழ் உரித்து விசாரணை நடத்தப்பட்டு, முடிவு 10 (1) ஏ 02.11.2021 அன்று வெளியிடப்பட்டது.<br>பிரதேச செயலாளர் 22.12.2021 அன்று இழப்பீடு கோரி விண்ணப்பித்தார், ஆனால் 17 தீர்மானத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டியுள்ளதால், 17 தீர்மானத்தை மீண்டும் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 17 தீர்மானம் 04.04.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, அமைச்சகம் 05.05.2022 அன்று இழப்பீட்டையும், 09.12.2022 அன்று வட்டி ஒதுக்கீட்டையும் வெளியிட்டுள்ளது. | நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை திறமையாக்கவும், கூடுதல் வட்டி செலவைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | இரத்தினபுரி மாவட்ட செயலாளர் நிவேத்திகல பிரதேச செயலக வளாகத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஏ, சி, எப் மற்றும் ஜே காணித்துண்டுகளை சுவீகரிப்பதற்காக நிவிதிகல, கலவான வீதியில் வசிக்கும் ஒருவரிடமிருந்து காணியை சுவீகரிப்பதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளார். இதற்காக, | 2014 ஆம் ஆண்டில் நிவித்திகல பிரதேச செயலகத்தை நிர்மாணிப்பதற்காக இந்த காணி கையகப்படுத்தப்பட்டது. 22.08.2014 அன்று பிரிவு 2 மற்றும் பிரிவு 4ன் கீழ் 13.07.2015 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேலும், 19.01.2017 அன்று கட்டளை 38 (அ) இன் கீழ் ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது மற்றும் 23.06.2017 மற்றும் 30.05.2019 ஆகிய திகதிகளில் 5 அறிக்கைகள் மற்றும் 7 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, | நிலம் கையகப்படுத்தும் செயல்முறையை திறமையாக்கவும், கூடுதல் வட்டி செலவைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 38 (அ) அ.வி 19.01.2017 அன்று வெளியிடப்பட்டது மற்றும் அதற்கான இழப்பீடு 04.01.2023 அன்று செலுத்தப்பட்டது. இதற்கமைய நட்டஈடு செலுத்துவதற்கான தாமத காலம் 5 ஆண்டுகளும் 11 மாதங்களும் 16 நாட்களும் எடுத்துள்ளதுடன் ரூபா.1,255,000 நட்டஈடாகவும், ரூபா.523,630 வட்டியாகவும் செலுத்தப்பட்டுள்ளது. | பிரிவு 9 இன் கீழ் உரித்துத் தேர்வை நடத்திய பின்னர் 10 (1) முடிவு 15.07.2022 அன்று வெளியிடப்பட்டுள்ளது. உரிமைகோரலை சரிபார்ப்பதில் உள்ள சிக்கல்கள் காரணமாக, கோரிக்கையை உறுதிப்படுத்துவதற்கும் இழப்பீட்டுத் தொகையை அறிவிப்பதற்கும் சுவீகரிப்பு அலுவலரான பிரதேச செயலாளருக்கு சிறிது காலம் பிடித்தது. அதன்படி, மேலே குறிப்பிட்டுள்ளபடி உரிமைகோரல் விசாரணையின் போது சிக்கலான சூழ்நிலைகள் காரணமாக உரிமைகோரல்களை முடிக்க எடுக்கும் நேரத்தை கட்டுப்படுத்த முடியாது. | |

## 3.4 சொத்து முகாமை

### 3.4.1 முறைக்கேடான வாகனபாவனை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் மற்றும் காணி உரிமைகள் தீர்வு திணைக்களம் ஆகியவற்றுக்கு சொந்தமான வாகனங்களை அடையாளம் கண்டு அகற்றுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை 2023 நவம்பர் 04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான நடவடிக்கை 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை. | சுற்றுலா மற்றும் காணி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் மற்றும் காணி உரிமைகள் தீர்வு திணைக்களம் ஆகியவற்றுக்கு சொந்தமான 6 வாகனங்களை முறைக்கேடாக பாவனை செய்தமைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது மதிப்பீட்டுக் குழுக்கள் அமைக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | வாகனங்களை அகற்றும் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். |

### 3.4.2 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலா அமைச்சகத்திற்கு சொந்தமான ஒரு வாகனம் 2019 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளானது. இது தொடர்பாக நி.பி திற்கமைய விசாரணை நடத்தப்பட்டதுடன் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்படவில்லை. பழுதுபார்ப்புக்காக போதிய காப்புறுதி இழப்பீடு இல்லாததால், இலங்கை மாநாட்டு பணியகம் பழுதுபார்ப்பதற்காக ரூபா 11.5 மில்லியனைச் செலுத்தியது. வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகித்த தனியார் நிறுவனமொன்றுக்கு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் 2024 பெப்ரவரி 27 | சுற்றுலாத்துறை அமைச்சுக்கு சொந்தமான CAAU -4004 இன் பழுதுபார்ப்புக்காக காப்புறுதி நிறுவனத்தினால் காப்பீடு செய்யப்படாத ரூபா 11,516,808 தொகையை செலுத்துவதற்கு இலங்கை மாநாட்டு பணியகம் இணக்கம் தெரிவித்துள்ளது. நிலுவைத் தொகையை செலுத்திய பின்னர், MT/ADM/01/22/2021/CAU-4004 இலக்கமும் 2024.02.27 ஆம் திகதியிடப்பட்ட கடிதங்களும் தற்காலிக அடிப்படையில் | நிதிப்பிரமானங்களுக்கு அமைய, விசாரணை நடாத்தப்பட்டு பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் 05 வருட காலத்திற்கு பயன்படுத்துவதற்காக அந்த நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. | வாகனம் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. |

**4. மனிதவள முகாமை**

**4.1 இணைக்கப்பட்ட ஊழியர்கள், உண்மையான ஊழியர்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலா மற்றும் காணி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட 04 சிரேஷ்ட மட்ட பதவிகள், மூன்றாம் நிலை 02 பதவிகள், இரண்டாம் நிலை மட்டத்தில் 21 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 06 பதவிகள் வெற்றிடமாக இருந்தன. | உதவிச் செயலாளர்/உதவிப் பணிப்பாளர் (காணிக் கொள்கை)/கணக்காளர் கொடுப்பனவு இந்தப் பதவிகள் நாடளாவிய ரீதியில் சேவையாற்றக்கூடியவை என்பதால் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடும் செயற்பாடு தற்போது இடம்பெற்று வருகின்றது. நிர்வாக அலுவலர் பதவி ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வன முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் தொடர்பாக 2024.02.29 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் குறித்து பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பல்நோக்கு அபிவிருத்தி திணைக்களத்தினால் கையகப்படுத்தப்படுவதால் வெற்றிடங்கள் தொடர்பில் 04.12.2023 திகதிய கடிதம் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை மதிப்பாய்வு செய்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும். |